ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 16—4—44 | இதழ் 6.

○ தொடர்கதை ○

## பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லேவாதி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறான். குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. குருக்கள் குமரகுருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அங்கு லேடிடாக்டர் லலிதாதன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]

ஆண்டாள் அழுதுகொண்டிருப்பதையும், அவளருகே அமர்ந்துகொண்டு அவள் புருஷன் கலங்குவதையும் கண்டலேடி டாக்டர் லலிதகுமாரி, ஒன்றும் புரியாதவளாய், ஏன்? என்ன சமாச்சாரம்? ஏன் இரண்டுபேரும் அழுகிறீர்கள்? ஏதாவது ஆபத்தா? என்று மடமடவெனக் கேட்கலானாள். ஒரு பெண்ணின் எதிரில் அழுவது கேவலம்என்று கருதிக்கொண்டு, ஆண்டாளின் கணவன், கண்களைத் துடைத்துக்கொண்டு, விசாரத்துடன், "கிரஹசாரப்பலன் யாரைத்தான் சும்மா விட்டுவிடும்? கைக்குஎட்டியது வாய்க்கு எட்டவில்லை என்றகதை போலாயிற்று, என்னசெய்வது? கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்றுகூறினார். "கிரஹசாரமாவது பரசாரமாவது! நீங்கள் பேசுவது எனக்கொன்றும் புரியவில்லையே" என்று டாக்டர் கேட்க, சோகத்துடன், கனவில் முதல் மனைவிவந்ததும், ஜாதகப்பலனைக் கூறியதும், ஆண்டாள் அலறியதும், கருச்சிதைந்ததுமான விஷயத்தை ஐயர், சாங்கோபாங்கமாகக்கூறி முடித்தார். இடையே எதும், பேசாமல், லலிதகுமாரி, அந்தப் புனைசுருட்டைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, ஆண்டாளை உற்றுநோக்கியபடி, "பாபம்! ஆண்டாளின் ஆசை அவலமாகி விட்டதற்காக நான் வருந்துகிறேன். இனி, இங்கே தங்கவேண்டிய அவசியமும் இல்லை. ஆண்டாளை அழைத்துக் கொண்டு, திவ்யக்ஷேத்திரங்களுக்குப் போய்விட்டு வாருங்கள்" என்று அனுதாபத்துடன் கூறினாள். ஐயர், ஆண்டாளுக்குத் தைரியம் கூறிவிட்டு; மறுதினம் இராகுகாலத்திற்குப் பிறகு, வீட்டிற்கு அழைத்துச்செல்வதாகச் சொன்னார். இதற்குள் லலிதகுமாரி, பில்தயாரித்துக் கொடுத்தாள். பணம் மறுதினம்கொண்டு வருவதாகக் கூறிவிட்டு, அவர்போய்விட்டார். பிறகு லலிதகுமாரி, ஆண்டாளிடம்சென்று. "என், இந்தச்சூது?" என்று கடுகடுத்தமுகத்துடன்கேட்டாள். 'நேக்கு ஒப்பலெ' என்று சாதாரணமாக ஆண்டாள்பதில்கூறினாள். "எதுபிடிக்கவில்லையம்மா உனக்கு! தாலிகட்டின புருஷனை ஏய்த்துவாழ்வது பிடிக்கவில்லையா? கர்ப்பிணிஎன்று பொய்கூறியது பிடிக்கவில்லையா? ஆண்டாள்! நீபெரிய ஜாலக்காரி. அந்த அசட்டுப்பேர்வழியை ஆட்டிப் படைக்கிறாய். கொஞ்சமாவது புத்தியுள்ளவனிடம் இதுபோல எவளாவது செய்யமுயன்றால், தெருச்சிரித்துவிட்டிருக்கும்,இன்னேரம். எப்படியோபோகட்டும், நீ உத்தமியை நம்பவைத்துமோசம் செய்தகாரணம் என்ன?" என்று லலிதா கேட்டாள். "சூத்ராவீட்டுக்குழந்தையை, என்குழந்தென்னுகூறி, எங்கஆத்திலே வளக்கறது, மகாபாபகாரியம்னு நேக்கு பயமாயிடுத்து. அதுக்காகத்தான் அவரிடம் சொப்பனம்னு கதைசொன்னேன். நீ இப்போ அதுக்கு என் பிரமாதமா கோபங்கொள்றே. நான் வேணுமானா நூறோ, இருநூறோ பணம் தந்துடறேன்" என்றாள் உத்தமி. "மோசக்காரி! ஜாதி அகம்பாவம் பிடித்தவளே! உன் நூறையும் இருநூறையும் குப்பையிலேபோடு" என்று கோபமாகக்கூறிவிட்டு, லலிதா விஷயத்தை யெல்லாஉத்தமியிடம் உரைத்ததோடு, இல்லைடைந்த அவளுக்குத் தேறுதல்கூறி, உத்தமிக்குப் பிறக்கும் குழந்தையைத்தான் வளர்த்துக்கொள்வதாக வாக்களித்தாள். மனைவியின்பேச்சை மெய்யெனநம்பிய ஐயர், மறுதினம், ஆண்டாளை வீட்டிற்கு அழைத்துச்சென்றார். விசேஷபூஜைகள் நடந்தன, சொப்பன தோஷம் நீங்க! கருச்சிதைந்தால், பலம் பாழாகிவிடுமே என்றுபயந்த ஐயர், ஆண்டாளுக்கு அதிகமான போஷணைகள் செய்யத்தொடங்கினார், திராட்சையும் கமலாவும், சாத்துக்கொடியும் பிறவும் கூடை கூடையாகவந்தன. புதிய புதிய டானிக்குகள். கருச்சிதைந்ததே என்று கவலைப்பட்டு, ஆண்டாள்—துரும்பாக இளைத்துவிடுவாளோ என்று பயந்தஐயர் அவள்மனம் நிம்மதியாகவேண்டுமென்று கருதி, சரசமாடவும், தொடங்கினார். எனவே ஆண்டாளுக்கு நஷ்டம்இல்லை, இலாபந்தான்!!

ஊருக்குப் போயிருந்த பார்வதிக்கு இவ்விஷயம் சூட்சமமாகத் தெரிவிக்கப் பட்டது. பார்வதியும் வந்து சேர்ந்தாள். ஆண்டாளின் துரோகம் பார்வதிக்கு ஆச்சரியமூட்டவில்லை. மாறாக, சந்தோஷமே தந்தது. அந்த ஜாதிவெறிபிடித்த குடும்பத்திலே, உத்தமியின் குழந்தை வளருவது, சமுதாயத்துக்கு நஷ்டம், எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டோ, அது நேரிடாமற் போனதற்காக அகமகிழ்கிறேன் என்று கூறினாள்.

(8ம்பக்கம் பார்க்க)

# சங்கே, முழங்கு!

S. நாராயணசாமி.

கேட்கக் கேட்க வெட்கமாய்
இருக்குதம்மப் மா
கேடுகெட்ட தெய்வங்கள்முன்
நாளில்செய்த யோக்யதையை
ஆதிசிவன் சக்தியை
அந்நாள் புணர்ந்ததும்
அன்னவர்கள் கூட்டுறவைத்
தேவர்காண நேர்ந்ததும்
பாதியில் அவர்கள் இன்பம்
பாழடைந்து போனதும்
...........................!
........................! (கே

என்ற அருமையான பாடலைச் சமுதாய சீர்திருத்த நாடகமான சந்திரோதயத்திலே, ஆர்மோனியம் வாசிக்கும் தோழர் சண்முகானந்தா அவர்கள் வெகு சிறப்பாகப் பாடித்தமிழ் மக்களுக்கு நகைச்சுவையை ஊட்டுகிறார். தன்மானத்தமிழர்களே! சற்றுச் சிந்தனையை அப்பாடலில் செலுத்துங்கள்! பாருங்கள் அதன் உரைகளை, உலகங்களை காப்பவரான சிவபெருமான் ஆயிரதேவவருடம் சக்தியுடன்சம்போகலீலையில்சரசத்துடன் இருக்க, அதைத் தேவர்கள்பார்த்துவிட, அவர்கள் இன்பம் பாதியில் பாழடைந்து போய், கடைசியில் அவர்கள் மூலப்பொருள்கள் அறுந்து கீழே விழுந்துவிட அவர்கள் அபாயமில்லாமல் தப்பினார்களாம்'. என்னே இப்பாடலின் சுவை! பைந்தமிழ் மக்களாகிய நாம் அதை எவ்வாறு ஏற்பது, எவ்வளவுஆபாசம்! இதை நம்செவியில் கேட்க நமக்கு வெட்கமாக இல்லையா? பகுத்தறிவுவாதிகளான நாம் பார்ப்பனிய பகல்வேஷத்தைக்கண்டு நம் மதியைப் பறிகொடுக்கலாமா? (சொன்னவர் சொன்னாலும் கேட்பவருக்கு மதி எங்கே போய்விட்டது) என்பதுபோல் பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்ற எடுத்துக்கூறும் பொய்ப் புராணக் கதைகளைக் கேட்டு நாம் தமிழ் மானத்தையும், மதியையும் இழப்பதா? மாசற்ற களங்கமிலா மணிமொழிச் சீலர்களாகியநாம், நம்வாழ்வை வதையச்செய்து வர்ணாஸ்ரமக் கொள்கையை நமக்குஊட்டி நம்மானத்தைப் பறித்து, சூத்திரன் என்னும் சுடுசொல்சூட்டி நம் செல்வத்தைச் சுரண்டும் சூதுக்காரரை வணங்குதல் நமக்குத்தகுமா? அவர்களால் ஆக்கப்பட்ட, கேட்க ஆபாசத்திற்கொப்பான புராணக்கதைகளைக் கேட்டுஅதன்படி நாம் ஒழுகுதல் நமக்குஅடுக்குமா? தமிழர்களே சற்றுப்பண்டையவாழ்வைக்கவனத்தில் நிறுத்திப் பாருங்கள். பார்ப்பன ஆட்சி நம் நாட்டில் பரவாமுன் நம் செந்தமிழ்நாடு இருந்த நிலையை, இமயம்வரையில் சென்று, வென்று இணையில்லாத் தமிழ்க்கொடியைநாட்டின இளஞ்சிங்கங்கள் எனப் பிரகாசித்த வீரத்தமிழ் அரசர்கள் ஆண்டவாழ்வை. கலிங்கப்போரையும் கருத்தில் சிந்தியுங்கள், பாருங்கள் தமிழர்களின் வீரம், கண்முன் காட்சி அளிப்பதுபோல் இருக்கிறது. அப்படிப்பட்ட வீரத் தமிழ்நாட்டை ஆரியம் என்னும் காரிருள் சூழ்ந்துகொண்டு தமிழ்க்கிரணங்களைப்பிரகாசிக்கவொட்டாமல் தடுக்கிறது. புராணம், இதிகாசம், காவியம் எனும் கொடிய புழுக்கள் அதில் நெளிந்து மக்கள் உள்ளத்தைமாற்றி மது உண்டவன்போல் செய்கிறது. இத்தகைய கொடுமைகள் நிறைந்த வைதீக வர்ணாஸ்ரமப்பேயுடன் நம் தமிழர்களில் இன்னும் சிலர்வாழ்நாளைச் செலுத்திவருகிறார்கள், அதனுடன் உறவாடிக்கொண்டும் இருக்கிறார்கள். அதன்போரால் பாகவதர் பண்டிதர் எனப்பட்டம் பதவிபெறச்சிலர் பாடுபட்டுப் பார்ப்பனிய ஆட்சியில் தமிழ் மானத்தை இழந்தும் அதற்குஉழைத்தும் வருகிறார்கள். சிலர் எம்மதமும் எமக்குச் சமம்தான் என்று இடத்திற்கு ஏற்றாற்போல் பேசி, வேசியைப்போல் நடித்து, மானத்தை இழந்தும் மதியை இழக்கவில்லை என்று மலர்ந்த முகத்துடன் மகான்கள்பலர் இருக்கிறார்கள். கடவுள்போராலும், மதத்தின் போராலும், நான் உயர்ந்தவன், ஆசாரியன் குரு, என்று சொல்லி மக்களை ஏமாற்றிப்பொருள் பறிக்கும் பகற்கொள்ளைக்காரர்களும் இருக்கிறார்கள். என்னே தமிழர்கள் வாழ்வில் இவ்வளவு இன்னல்கள்.

ஆரியம் அண்டினவரைக்காந்தம்போல் இழுக்கும் காதகச்சுழல், இதனை உணராமல் மறத்தமிழர்களாகிய நாம் இத்தகைய வஞ்சக நச்சரவத்தினிடம் நாட்டம் கொள்ளலாமா? நம்பொருளைப்பறித்து மதோன்மத்தர்களாக வாழும் கசடர்கள் மொழி, நம் மணிமொழியாகிய செந்தமிழிலே சேர்க்கப்படலாமா? மலை எடுத்த தோளர்களாகிய நம் தமிழ்மக்களிடம் அண்டிப் பிழைக்கவந்த ஆரியத்தின் அடிமையாக வாழலாமா? வெஞ்சமரில் எதிரிகளின் வேலைக்கண்டு வெகுண்டு ஓடாத நாம் கேவலம், புஞ்சை நிலத்தில் முளைக்கும் புல்லை ஆயுதமாகக்கொண்டு தமிழனிடம்அண்டித், தமிழனை ஏமாற்றி அவன் பொருளைக்கொண்டுபோய்வயிற்றைக் கழுவும் வண்டினங்களுக்கு வணங்கிவாழலாமா? மோட்சமென்றும், நரகமென்றும், அந்தரலோகமென்றும், இந்திரலோகமென்றும் சொல்லி நம்மை ஏமாற்றித் திரியும் கிழிந்த பஞ்சாங்கப்பட்டினருக்குப் பணிந்து வாழலாமா? தமிழர்களே! ஆரிய அக்ரமக்குட்டையில் விழாதீர். அதன் அழுக்குச் சேற்றிலேபுரண்டு வாழ்நாளை வதையச் செய்துகொள்ளாதீர்.

ஐரோப்பியமேல்நாடுகளைச்சற்று நோக்குங்கள். பாருங்கள் அவர்கள் எவ்வளவுமேன்மையடைந்து மேலும்மேலும் முன்னுக்கு வருகிறார்கள். நம் நாட்டைப் போல் கண்டதை எல்லாம்கொண்டாடிக் கருத்தைஇழக்கும்கபோதிகள் அங்கில்லை, மக்கள் கருத்தை மழுங்கவைக்கும் மதோன்மத்தர்கள் அங்கில்லை, புராண, காவியம், சொல்லும்புல்லாயுதக்காரர்கள் அங்கில்லை, பகுத்தறிவைக்கெடுக்கும் பஞ்சாங்கச் சூரர்கள்அங்கில்லை,வைதிகப்பேச்சும் வஞ்சனைக்காரர்களில்லை. நம்தமிழ்நாட்டிலோ மேற்சொன்ன மேதாவிகளுக்கு அளவே இல்லை!

மேல்நாடுகளிலே செய்யப்பட்ட விஞ்ஞானத்தின் விநோத ஆயுதங்களைக் கண்டு ஆனந்த மடைகிறோம். நம் தமிழ் நாட்டிலோ, விதவையின் துயரம்! பசியின் கொடுமை! பார்ப்பானுக்கு அடிமை! பஞ்சத்தின் விநோதம்! வேலையில்லாத் திண்டாட்டம்! முதலானவைகளைக்கண்டு மனம் புழுங்குகிறோம். ஏதனால்? வைதிகத்தின் வஞ்சகச்சுழல் நம்மை வழுக்கு நிலத்தில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. தலைதூக்கமுடியாமல் நம் தமிழ்மக்கள் தவிக்கின்றனர். கனிமொழி கசங்கி நலிகிறது, தமிழ்நாடுதாழ்ச்சியுறுகிறது. தன்மானத்தமிழர்களே! இனியாகிலும் விழிப்டெழுந்திருங்கள்! வெல்வோம் ஆரியத்தை! வீழ்த்துவோம் வைதிக வஞ்சனையை, என்று முழக்கமிடுங்கள்! பகுத்தறிவுச் சங்கங்களைத் தமிழ்நாட்டில் பரப்புங்கள். நம்தமிழ்நாட்டுக்குத் தளர்விலாது உழைத்துவரும் தனிப்பெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுங்கள், இன்பத்தமிழ் நாட்டைப் பழயபடி செழித்தோங்கச் செய்யுங்கள், இன்னல் விளைவித்த ஆரியத்தைச் சின்னாபின்னப் படுத்துங்கள்.

பகுத்தறிவே ஆரியத்தைச் சல்லடைக் கண்களாக எரிக்கும் எஃகுத்துண்டுகள்! வைதீகத்தின் வாலைவெட்டும் வாள்! வர்ணாஸ்ரமத்தை அழிக்கும் வேல். பார்ப்பனியப் பாதகக்கோட்டையைப் படுசூரணமாக்கும் பலம்கொண்ட வீரர்கள்! அத்தகைய பண்டைய கருத்துக்களையும் பழந்தமிழர்களின் வீரச்செயல்களையும் விரிவாக எடுத்துரைக்கும் இனிய பெரும் தளபதிகளை நம் தமிழ் நாடு பெற்றுவிட்டது. வாலிபத் தமிழர்களாகிய நாமும், பெரியாரின் பொன்மொழிகளையும், தளபதிகளின் கனல்கக்கும் கருத்துக்களையும் பின்பற்றி நம் இன்பத் தமிழ் நாட்டைமீட்டு

தமிழ் நாடுதான் மேலான நாடு
தமிழர்க்கெல்லாம் மற்றவைகாடு.

(7ம்-பக்கம் பார்க்க.)

# பள்ளியறையில் பரமசிவன்!

— பரதன். —

★

"மீனாட்சி! எதற்காக இப்படிக்கோபங் கொள்கிறாய்? காமாட்சி! நான் கொஞ்சுவதுஉன் காதிலே விழவில்லையா? நீலாயதாட்சி! நீ இப்படி இருந்தால் என்மனம் நிம்மதியடையுமா? அகிலாண்டேஸ்வரி! நான் உனக்குத்தவறென்ன செய்தேன்! அம்பிகே! இப்படிப்பார். தியாகவல்லி! திரும்பிப்பார். திரிபுரசுந்தரி......" என்று சரசமாடும் சத்தம்கேட்டது. இதுயார், அர்த்தராத்திரியிலே, அனேகஸ்திரீகளின் பெயரை அழைப்பது என்று பார்த்தேன், ஆலவாயப்பன், சொக்கன், சிவபெருமானிருக்கிறாரே, அவர் தமது தர்மபத்தினியுடன் பேசிக்கொண்டிருக்கக் கண்டேன். அவருக்கும் அம்மைக்கும் ஆயிரக்கணக்கிலே நாமதேயம் உண்டல்லவா! ஆலயத்துக்கு ஆலயம், வேறுவேறு பெயரல்லவா! ஆகவேதான் அவர் காமாட்சி! மீனாட்சி! நீலாயதாட்சி! அம்பிகே! திருபுரசுந்தரி! என்று அனேகவிதமான பெயர்கூறி அழைத்தார். அம்மையாரோ, வாயை அசைக்கவில்லை" என்று கூறினான் வீரன். "போதுமப்பா உன் துப்புரளி நிறுத்து. எனக்குவேறுவேலை இருக்கிறது. உன்கதையைக் கேட்க நேரமில்லை" என்றுநான் சொன்னேன். வீரனா விடுபவன்! "என்கதையைக் கேட்க மனமிருக்குமா உனக்கு! நான் என்ன "சர்" பட்டம்பெற்றவனா, மிட்டாமிராசுஉடையவனா, பட்டம் தரித்த புலவனா, பாவாணனா, புராணிகனா, என்னிடம் உனக்கு அலட்சியந்தான் இருக்கும்," என்று கோபித்துக்கொண்டான். "கோபப்படாதே வீரா! நீ சொல்ல விரும்புவதோ ஏதோ ஒரு புதுப்புராணம்! நாட்டிலே, நானாவிதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பலருடைய அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. சர்க்காரின்போக்கும் அதனைச் சார்வோரின் போக்கும், காங்கிரசின் நிலையும், லீகின் நிலையும், திராவிடர் கிளர்ச்சியும் மாணவர் எழுச்சியும் கலை வளர்ச்சியும் ரசிகர்களின் உள்ள நெகிழ்ச்சியுமெனப் பல்வேறு விஷயங்களிருக்க, நீ எதையோ இழுக்கிறாயே" என்றுநான்சமாதானங்கூறிவிட்டுச்சாந்தமோ திருப்தியோ அடையாத வீரனுக்கு உண்மை நிகழ்ச்சியை உரைத்தால் உளம் மகிழுமெனக் கருதி, "கேள் வீரா, உண்மையாக நடைபெறும் சம்பவங்களைக் கவனிக்கமாட்டேனென்கிறாயே. இத்தாலியிலே போர் நடக்கிறதல்லவா. அங்கே காசினோ என்ற களத்திலே நடந்த ஒரு அற்புதமான வீரசம்பவத்தைக்கேள், தமிழரின் புகழ் சுடர்விட்டு விளங்குவதைப் பார். பீரங்கிகள் முழக்கமிடும் களம், துப்பாக்கிக்குண்டுகள் நெஞ்சைப் பிளக்கும் இடம், மூர்க்கத்தனமாக ஜெர்மானியர் தாக்கும் அந்தப் போர்க்களத்திலே, எதிரிகள் சுரங்கவெடிகளை ஆங்காங்குஅமைத்து வைத்திருந்தனர். நேசநாட்டுப் படையினரின் ஒரு பிரிவினர் இந்தச் சுரங்கவெடிகளை அப்புறப்படுத்தும் அபாயகரமான வேலையிலே ஈடுபட்டனர். அச்சமயத்திலே, ஒருநாயக், சுரங்கவெடி ஒன்றின் மீது இடறவே, தீப்பிடித்தது. தீர்ந்தது மறுவிநாடி குண்டு வெடிக்கும், அந்த இராணுவ உத்தியோகஸ்தரின் உடல் சுக்குநூறாகிவிடும். அவரோ அதைத் தெரிந்துகொள்ளவில்லை. மரணம்தன்னை தொட்டுஇழுப்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. என்னநடந்தது தெரியுமா! வீரா! பண்டைப்பெருமையுள்ள தமிழ் மகனொருவன், அங்கு இருந்தான்! கண்டான் காட்சியை! மிரண்டானில்லை. நமக்கென்னவென்று சும்மா இருக்கவில்லை. நாயக், விலகு, ஓடு, பிழை, சுரங்கவெடி! என்றுகூவிடவுமில்லை. ஒருவிநாடியும்தாமதியாது பாய்ந்தான், குண்டின்மீது! அதனைக் கட்டிப்பிடித்தான், குண்டுவெடித்தது, அவன்உடல் சின்னாபின்னமாயிற்று. உயிரிழக்க இருந்த உத்யோகஸ்தன் தப்பினான். வீரன் மாண்டான், வெற்றிபெற்று ஓங்கிற்று அவன்புகழ். தன்னுயிரைவிட்டேனும் மற்றொருவன் உயிரைக் காப்பாற்றும் தமிழ்ப்பண்பு, ஆபத்து நேரத்திலே அஞ்சா நெஞ்சம் கொள்ளும் ஆண்மை, தமிழருக்கு உண்டு, என்பது காசினோ களத்திலே சிலநாட்களுக்கு முன்பு நடைபெற்ற இச்சம்பவத்தால் உலகுக்கு விளக்கப்பட்டது. வீரத்தியாகம் புரிந்த அவன், எங்கள் ஜில்லாவாசி! அதை எண்ணும்போதே, புன்னகையும் கண்ணீரும் கலந்துவருகிறது. செங்கற்பட்டுக்கடுத்த வாலாஜாபாத் என்ற நகருக்குப் பக்கத்திலே உள்ள குக்கிராமவாசி, கடல் கடந்துசென்று, காசினோ களத்திலே தமிழ் மரபினை உலகுக்கு உணர்த்துவித்தான், அவன்பெயர் சுபேதார் சுப்பிரமணியம். எதிரியின் படைவரிசைக்குப் பின்புறம், விமானமூலமாகச் சிறுபடையை இறக்கி, எதிரியைத்தாக்கும் புதியதோர்போர்முறையைப், பர்மாப்போரிலே செய்துகாட்டிய ஜெனரல் விங்கேட் என்பவர், விமானவிபத்தினால் இறந்துபோனார். அவருடையஆற்றலையும்ஆண்மையையும், பரிதாபகரமான முடிவையும் உலகம் உரைத்திடுவதுபோலவே, சுபேதார் சுப்பிரமணியத்தின் வீரத்தியாகத்தைப்பற்றி வியந்துரைக்கிறது. வீரர் கோட்டத்தின் விளக்கு சுடர்விட்டெரிகிறது. இத்தகைய சுடரொளி கண்டு சுதந்திரதேவி, தனக்குரிய கோயில் இதுவே என்று பூரிப்பாளேயொழிய, சொல்லம்பரின் வெல்லப்பேச்சுக்கு மகிழ்ந்துவிடமாட்டாள். சுபேதார் சுப்பிரமணியம் போன்ற தியாகிகளைப்பற்றிப் பேசுவதும் எழுதுவதும், படிப்பதும், கேட்பதும், வீரத்தை, பண்பை, தமிழரின் பெருமையை ஊட்டுமே! அதைவிடுத்து, வீணரைப் பற்றிப் பேசுவானேன். பார்வதியும் பரமசிவனும் பாதிராத்திரி வேளையிலே, என்ன பேசிக்கொண்டால் நமக்கு என்னப்பா!" என்று நான்கூறினேன். வீரன் சிலவிநாடி ஆழ்ந்தயோசனையிலே இருந்துவிட்டு, "பரதா! நீ கூறிய சம்பவம் உண்மையிலேயே, தமிழர்கள்யாவரும் பெருமையுடன், உலகைநோக்கி நின்று "உணரப்பா தமிழ் வீரத்தை!" என்றுரைக்கக் கூடிய வீரச்செயலே, அதற்கோர் ஆட்சேபனையுமில்லை. அவைபோன்ற வீரசம்பவங்களைக்கேட்டு நான் பெருமைகொள்ளாமலுமிருப்பதில்லை. கீர்த்திக்கணவாயிலே புகுந்த சுபேதார் சுப்பிரமணியத்தின் புகழ் "தமிழகம் எங்கும் தெரியச் செய்வேன் இது உறுதி" என்று கூறினான், நானும் மகிழ்ந்தேன், மேலும் சில கூற எண்ணினேன், வீரனோ, "என்கதையைக்கேள். பார்வதியிடம் பரமசிவன், இவ்வாறு பேசிடக்கேட்ட நான்......" என்று பழையபல்லவியைத்தொடங்கினான், "என்ன வீரா! பார்வதியும் பரமசிவனும் பேசுவதும், நீ பக்கத்திலே இருந்துகேட்பதும், இதுதானா விஷயம்? யார் இதை நம்புவார்கள்" என்று நான் குறுக்கிட்டேன். ஓடிவரும் வெள்ளத்தைத்தடுக்க ஒரு ஜாண் கல்லைவைத்தால், வெள்ளம் நின்றுவிடுமா, வீரனா, என் குறுக்குப் பாலத்துக்கு அடங்குபவன். குரலைச்சரிப்படுத்திக்கொண்டு கூறத்தொடங்கினான். கேட்பதுதவிர வேறுஎனக்கு வழியில்லை! எதற்கும் இன்னொருமுறை முயற்சி செய்துபார்ப்போம் வீரனின் வாயை மூட என்று எண்ணி, "வீரா! விஷயம் தெரியுமோ! ஜப்பானியர்கள் இம்பால் நகருகே வந்துவிட்டனர். கோஹிமா என்ற ஊருக்கும் ஆபத்து. யுத்தம்நம்மை நெருங்கிவிட்டது" என்றுஆரம்பித்தேன், வீரனின் கவனத்தைப் பரமசிவன் பார்வதியின் பள்ளியறையிலிருந்து, போர்க்களத்துக்கு. இழுத்துச்செல்வோமென்று. அவனோ அதேவிஷயமாகத்தான் அவர்களும் பேசிக்கொண்டனர்" என்று என்னிடம்கூறினான்.

"விசித்திரமாகத்தான் இருக்கிறது. பரமசிவனும் பார்வதியும், இதைப்பற்றியும் பேசினார்களா? நான் அவர்கள், தங்கள் திருப்பார்வையை நாமிருக்கும் திக்குக்கே திருப்பக்காணோமே என்று வியா

(5 ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 16—4—44 ஞாயிறு


## தீராதவினை!

தீராதவல்வினையைத் தீர்த்துவைப்பான் கோவிந்தா! என்று அடிவயிறு வலிக்கக் கூவிக்கொண்டு, சுடுமணலில் புரளும் பட்டைநாமதாரிகளை அன்பர்கள் கண்டிருப்பர். அவர்களின் "தீராதவினைகளைத்" திருப்பதிப் பெருமாள் தீர்த்துவைக்கிறாரா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும், அநாகரிகமான முறையிலே பக்தியைக்காட்டும் இவர்தமைக் கண்டு பகுத்தறிவாளர்கள் கேலிசெய்வது ஒருபுறமிருக்கட்டும், பார்ப்பனர்கள் இதுபோலப் புரளாமலேயே தமது பக்தியைக்காட்டிக்கொள்ளும் அறிவாளர்களாக இருப்பது ஒருபுறமிருக்கட்டும், ஆணங்குகள் தங்கள்கார்நிறக் கூந்தலைஇழந்துவிட்டுக்காணச்சகியாஉருவாகமலைமீதிருந்து கீழே இறங்கிவரும் கோரக்காட்சியும் ஒருபுறமிருக்கட்டும், எந்த வினையை ஏழுமலையான் தீர்த்து வைப்பவனாக இருப்பினும், இந்துமகாசபைக்காரத் தலைவர்கள் இருக்கிறார்களே அவர்களின் பழமைப்பித்தம் இருக்கிறதே அதனைத்துளியும் தீர்த்துவைக்க முடியாது என்று நிச்சயமாகக் கூறலாம். சந்தேகமிருப்போர், டாக்டர் மூன்ஜே அவர்களைக் கவனிக்கவேண்டுகிறோம்!

விசித்திரமான மனிதர்! பேசுவது வீரம், அனுஷ்டானமோ அழுக்குபோன்ற அந்தச்சனாதனமே தான்!

திருப்பதி தேவஸ்தான நிதியிலிருந்து ஒரு கல்லூரி நிறுவமுயற்சி நடக்கிறது, அதற்கு ஏற்றவிதத்திலே, சட்டத்தைத் திருத்தும் யோசனையும் இருக்கிறது. இதனைஎதிர்க்கிறார் டாக்டர்மூன்ஜே! இந்துக்களின் பணம் இதரர்களுக்குப் பயனாகலாமா என்று இரைச்சலிடுகிறார். மதஸ்தாபனப்பணம் வேறுகாரியத்துக்குச் செலவிடப்படுவதா என்று கேட்கிறார்.

அன்பே ஆண்டவன், என்று கூறுவது உண்மை எனில் இந்து மார்க்கத்திலுள்ள மக்கள் தவிர, பிறருக்கு, அந்தப்பணம் செலவாகக்கூடாது என்று கூறுவது பொருந்துமா? அறிவேஆண்டவன் என்ற தத்துவம் பேசுகிறார்களே, அதிலே, பேசுபவர்களுக்கு நம்பிக்கைஇருந்தால், அறிவு வளர்ச்சிக்காக ஆலய அமைப்புநிதி பயன்படுத்தப்படுவதை எதிர்க்கலாமா? அன்பும், அறிவும், வேண்டாம் என்றால், ஆலயத்திலே வேறுஎதைக்காணப் போகிறார்கள்? இருண்ட பிராகாரங்களும், அதிலே வட்டமிடும் வௌவாலும், தொங்கு வயிறுடைப்புரோகிதக் கூட்டமும் அவர்கள் தொட்டுப்பூஜிக்கும் உருவங்களும், இருந்தால்போதுமா! இந்துமகாசபையின்எண்ணம்என்ன? அதிகாரம் அந்தக்கட்சியிடம் இருந்தால் என்ன கொள்கை இருக்கும் என்பது மூன்ஜே அவர்களின் பேச்சால் விளங்குகிறது! புது உலகம் இத்தகைய பழமை விரும்பிகளைக்கண்டு கைகொட்டி நகைக்கிறது!!

---

## பள்ளியறையில்

6-ம் பக்கத்தொடர்ச்சி.

நீ சிரிக்கிறாயே! சுதேசமித்திரன் ஆசிரியருக்கு, இதேபோலச் செய்தி அனுப்பப்பட்டது. அவர் சிரிக்கவில்லை பரதா! உன்போல, இதையெல்லாமா பத்திரிகையிலே வெளியிடுவது என்று பத்திரிகா தர்மமும் பேசவில்லை. அழகாக, அலங்காரமாகப் பிரசுரித்திருந்தார். என்ன கனவு தெரியுமோ? மகாகனம் சீனுவாச சாஸ்திரியாருக்குக் கனவிலே மஹா விஷ்ணுகாட்சியளித்தாராம். முதலிலே கொஞ்சம்ஒளிதெரிந்ததாம், பிறகு வரவர ஒளிபெரிதாகிக்கொண்டே இருந்ததாம், கடைசியில் சைவமகாகனத்துக்கு மஹா விஷ்ணு தெரிசனம் தந்தாராம். இதைப் பத்திரிகையிலே வெளியிட, மித்ரன் ஆசிரியர், உலகப்பொருளாதாரமென்ன, யுத்தத்தின் போக்கென்ன, நாணயமாற்று விகித விளக்கமென்ன, நாட்டுப்பொது நிதி விஷயமென்ன, சர்ச்சிலின் தவறு, ஸ்டாலினின் கவனக்குறைவு, சீனாவின் சிரத்தை, அமெரிக்காவின் அக்கறை, என்ற இன்னோரன்ன பிறமகத்தான விஷயங்களிலே மனதை இலயிக்கச்செய்யும் ஆசிரியர், மகாவிஷ்ணு மகாகனம் கனவிலே பிரத்யட்சமானார் என்ற செய்தியை வெளியிட்டதே. இன்னம்சிலகூறட்டுமா" என்று மேலும் பேசத்தயாரானான் வீரன்.

"வேண்டாம்! வேண்டாம் வீரா! உன் கனவு பற்றியே இக்கிழமை வெளியிடப் போகிறேன்" என்று வீரனிடம் கூறினேன், வெளியிட்டுவிட்டேன். என்வேலை முடிந்தது, இனிச்சிந்திப்பது உங்கள் வேலை!!

## திருமணம்.

3—4—44 திங்கள் காலை வடக்கு பொய்கை நல்லூரிலே, வேலூர் தோழர் C. P. சின்னராசு அவர்கள் தலைமையில் தோழர் P. V. இராமய்யாவுக்கும், A. C. R. மாரிமுத்து அம்மாளுக்கும், தமிழர் திருமணம் நடைபெற்றது. அதுசமயம் T. S. D. வேல் அவர்கள் தமிழர் திருமணம் என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார், திராவிடர் கழக வளர்ச்சிக்கும் குடி அரசு, திராவிட நாடு வளர்ச்சிக்கும் முறையே ரூபாய் ஒன்று கொடுக்கப்பட்டது. திராவிடக்கழகத்தாரால் மணமக்களுக்கு மாலைபோடப்பட்டது அன்றுமாலை 6-மணிக்கு கோரக்கசித்தர் சன்னதிக்கெதிரில் பொதுக்கூட்டம் கூடியது. அதுசமயம் வேலூர் தோழர் C. P. சின்னராசு தஞ்சை தோழர் திராவிடநடிகர் தலைவர் T. S. D. வேல் இவர்கள் சீர்திருத்தம் என்பதுபற்றிப்பேசினார்கள்.



## மறைவு.

திருச்சிச் ஜில்லாவிலுள்ள நமது கட்சிப் பிரமுகர்களில் முக்கியமானவரும் பிரபல மருத்துவருமான ராஸ்பகதூர் டாக்டர் எ. மதுரம் அவர்கள் 7—4—44-ல் இயற்கையெய்தியமை ஈடுசெய்து கொள்ளமுடியாத ஒருநஷ்டம். அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபம் உரித்தாகுக.

° ° °

## ஜெயராம நாடார்.

சென்னை நகராண்மைக் கழக உறுப்பினரும், நமது இயக்கப்பற்றுடையவருமான சென்னைத் தோழர் S. P. ஜெயராமநாடார் அவர்கள் 29—1—44ல் இயற்கை எய்தினார். அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

° ° °

## நாட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆசிரியராய் இருந்தவரும் பெருநாவலர் என்ற பட்டம்பெற்றவரும் "தமிழ்ப்பொழில்" "செந்தமிழ்ச் செல்வி" ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராய் இருந்தவருமான தோழர் வெங்கடசாமி நாட்டார் அவர்களின் மறைவுகேட்டு வருந்துவதுடன், அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## செல்வம் நினைவுநாள்.

26—3—44 ஞாயிறுமாலை 6மணிக்கு வில்லிவாக்கம் சமதர்ம சங்கத்தின் ஆதரவில், பஜனைகோயில்தெருவில் அமைந்திருந்த பந்தலில் கொண்டாடப்பட்டது. தோழர் T. S. பார்த்தசாரதி தலைமை வகித்தார். மதுரகவி, V. V. முருகேச பாகவதர் சர். செல்வம் படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் S. நடேசன், N V. நடராசன், A. ஆதிமூலம், M. அமிர்தவாசகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பள்ளியறையில்

3ம் பக்கத் தொடர்ச்சி.

கூலப்பட்டேன்." என்று நான் பேசினேன், கேலியிலே வீரனுக்கு விருப்பமாயிற்றே என்பதற்காக. "பரதா! கேள் விஷயத்தை, கோபமாக இருந்த பார்வதியின், முகவாய்க்கட்டையைபிடித்தார் பரமசிவன், பிறகு ஏதோசெய்தார், கலகலவென அம்மையார் நகைத்திடவே, அப்பா! சிரிப்புவர இவ்வளவு நேரமாயிற்று! கோபம் ஒழிந்ததா?" என்று கொஞ்சுமொழி பேசினார், புலித்தோலாடையார். பூவையாரோ, மீண்டும் முகத்தைப் பழயபடி வைத்துக்கொண்டு, "பெண்கள் கோபித்துக்கொண்டால், ஏதாவதுபேசி, எதையாவதுசெய்து, பெண்களுக்குச் சிரிப்பு மூட்டிவிடுவதும், காரியத்தைச் சாதித்துக்கொள்வதும், ஆண்களின் வழக்கந்தானே. அதற்கு நீர்தானேகுரு!' என்று பரமசிவத்தைக் குத்தலாகக் கூறிவிட்டு, "என்ன கோபம்! என் மனஸ்தாபம் என்று கேட்கிறீரே, ஏன் இராதுகோபம்? ஒரு மனைவியின் காதிலே, தனது கணவனைப்பற்றிப், பலபேர் தூஷித்தால், மனைவியின் மனம் புண்படாதா? உமக்கென்ன, உலகத்தார் என்னவேண்டுமானாலும் உரைக்கட்டும் கவலையில்லை என்று இருக்கிறீர். என்னால் முடியவில்லையே" என்று கூறிவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொள்ளவே, கபாலி, கண்களை அகலத்திறந்து, "பார்வதி! யார் என்னைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசினார்கள்? சொல் சீக்கிரம், அவர்களைப் படுசூரணமாக்குகிறேன்" என்று வெகுண்டுரைத்தார். "நீரே நேரடியாகப்பாரும்கண்ணால், உம் காதினால் கேளும் உம்மை யாரார் என்னென்ன கூறிநிந்திக்கிறார்கள் என்பதை" என்று கூறிக்காமாட்சி, பரமசிவத்தை மேல்மாடிக்கு அழைத்துச்சென்றிடவே, நானும்மெள்ள, ஓசைபடாமல், அவர்கள் கண்களுக்குத்தெரியாமல், மேல்மாடிக்குச்சென்றேன். பொலிவுடன் விளங்கிய பூரணச்சந்திரன், மாசுமருவற்ற வானத்திலே நட்சத்திரங்கள் பலசூழ இருக்கக் கண்ட பரமசிவன், "பிரியே! அதோ பார்! அழகிகள் பலர் புடைசூழ அரசிளங்குமரி உலவுவதுபோலச் சந்திரன் காட்சி அளிப்பதை. இந்தநேரத்திலே, நிலவொளியிலே, நீயும் நானும், யாரோ எதற்கோ நிந்திப்பதைப்பற்றிப் பேசுவதைவிட........" என்றுகூறி முடிப்பதற்குள், பாரவதி யார், அதோபாரும், என்று, ஒரு காட்சியைக் காட்டினார், பூலோகத்திலே. நானும் பார்த்தேன், பரமசிவனும் பார்த்தார்!! பூலோகத்திலே எங்கோ ஓர்இடம்அது. மக்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டும், ஒருவரை ஒருவர் இழுத்துக்கொண்டும், நீர்புரளும் கண்களும், பதறும் உடலும், திகில் தோய்ந்தமனமும் கொண்டவர்களாய், காடு மலை கடக்கக்கண்டேன். 'காமாட்சி! இது என்னகாட்சி," என்று கேட்டார் பரமசிவன். "காட்சியைக்கண்டீரா? சரி, அவர்கள் பேசுவதைக்கேளும்" என்று அம்மையார் உரைத்தார். கோரமான அக்காட்சியைக்கண்ட, எனக்கு அவர்களின் வார்த்தையும்கேட்டது. "அட ஆண்டவனே! உனக்குக் கண்ணில்லையா? உன்நெஞ்சம்கல்லா? இப்படி எங்களைத் தவிக்கவிடும் உனக்குத் தயாபரன் என்று பெயரா? உனக்குக்கோயில்கட்டிய கரங்களைக்கொண்டு இன்று, என்னசெய்வது என்று தெரியாமல், பிசைந்துகொள்கிறோமே, உனக்குக் கருணையில்லையா? உன் கோயிலை வலம்வந்த கால்கள் இன்று, காடுமேடுசுற்றி, உயிர்பிழைக்க ஒருஇடம் கிடைக்காதா என்று ஓடத்தானே பயன்படுகிறது, எங்கள் ஓலம் உன்செவிக்கு எட்டவில்லையா? உனக்குத்திருவிழாக்கள் நடத்திக், கோயில் வெடிச்சத்தத்தைக் கேட்டு ஆனந்தித்த காதுகளிலே பீரங்கி வேட்டுச்சத்தம் விழுந்து துளைக்கிறதே, உமது மனம் இளகாதா?" என்று அந்த மக்கள் கதறினர். யார் அவர்கள்? ஏன் அப்படி அழுகிறார்கள்? என்று கேட்கத் துடித்தேன், ஆனால் என்னை நானே அடக்கிக்கொண்டேன், நான்பேசினால் நான் இருப்பது தெரிந்துவிடுமே என்ற பயத்தால். நான்கேட்டறிய எண்ணியதை அறிந்தவர்போலப் பார்வதியார் மேலும் பேச ஆரம்பித்தார். "அந்த இடம் இம்பால் நகரம்! கிராமமக்கள் ஜப்பானியரின் கரத்திலே சிக்கிச் சீரழியக்கூடாது என்பதற்காக, ஊரைவிட்டு, அகதிகளாகி இம்பாலை நோக்கி, இடர்மிகுந்து செல்கின்றனர். கண்ணில்லையா என்று உன்னைக்கேட்கின்றனர், அதன் சுருக்கம், குருடா நீ என்பது! மனம் இரும்பா என்று கேட்கின்றனர். நாதா! இதைப் போல மட்டுமல்ல, இன்னும் கடுமையாக ஏசிப்பேசினார்கள். சென்றதிங்கள், வங்காளத்திலே, பட்டினியால் மாண்டபரிதாபத்துக்குரிய மக்கள். அதைப்போலவே, பழித்துப்பேசினார்கள், பஞ்சம் பிணி மிகுந்த பல்வேறு இடங்களிலே. குருடன் ஈரமற்ற நெஞ்சினன், கொடுமை புரிபவன், ஏழைகளை ரட்சிக்காதவன், என்றெல்லாம், கணவனைப் பற்றிப்பிறர்பேசிடக்கேட்டால் மனைவியின் மனம், என்ன பாடுபடும், அதை உத்தேசித்தாவது, நீர், இந்த மக்களுக்கு ஏற்பட்ட அவதியைப் போக்கவேண்டாமா? முடியவில்லையானால், அதையாவது அவர்களிடம்சொல்லிவிடவேண்டாமா? கண்ணெடுத்துப்பாராமலும், காதுகொடுத்துக்கேளாமலும், கைலாயவாசமும்எனதுநேசமும், நாரதகானமும் நந்தியின் மிருதங்கமும், கங்கையின் சல்லாபமும் மற்றச்சுகபோகமுமே போதும்என்றிருக்கலாமா?" என்றுகேட்டார். அம்மையின்பேச்சு ஐயனுக்குக்கோபமூட்டும் என்று நினைத்தேன். சக்தியின்பேச்சு சிவனுக்குக் கோபமூட்டவில்லை. விஷயத்தைச் சாவதானமாக உலவிக்கொண்டே விளக்கலானார். "பார்வதி! பூலோகத்திற்கு நான் தரவேண்டியது அனைத்தையும் தந்தாகிவிட்டது. செய்யவேண்டியது அனைத்தையும் செய்தாகிவிட்டது. இனி என்னால் ஆவது ஒன்றுமில்லை" என்று கூறினார். பார்வதியார் வேகமாக அவர்பின்சென்று, தோளைப்பிடித்துக் குலுக்கி "பேஷ்! செய்யவேண்டியதெல்லாம் செய்துவிட்டீரா? நன்றாக இருக்கிறது உமது நியாயம்? கேட்பாரில்லாததால், எதைவேண்டுமானால் செய்யலாம், எப்படிவேண்டுமானாலும் பேசலாம்என்ற துணிவு பிறந்துவிட்டது உமக்கு" என்று கேட்டாள். என்மனதிலே அதேபோது அதே எண்ணந்தான் குதித்தது. சிவபெருமான் "சிவகாமி! சீற்றத்தைவிடு! நான் உலகைப்படைத்தேன்! உயிரைப் படைத்தேன்! உயிர்வாழவகையும்படைத்தேன்! கவர்ச்சிமிக்க காடுகளைப் படைத்தேன், கனிமரச்சோலைகளைப் படைத்தேன், காறுகளை உண்டாக்கினேன், காற்றையும் நெருப்பையும் கடமையைச் செய்கஎன்றுஏவினேன். வற்றாதஆறுகளையும் வளமுள்ள நிலத்தையும்வழங்கினேன். மக்களின் சுகபோகத்துக்கானசகலபதார்த்தங்களையும்அளித்தேன், கடலைப்படைத்தேன், கடலைக் கடக்கக்கலமும் தந்தேன். கடலிலே முத்துகளைப்படைத்தேன், அதைகண்டவன்எடுத்தேகாவண்ணம், சுறாவையும் சுழல் அலையையும் அவைகட்குக் காவலாக்கினேன். தங்கத்தைப் படைத்தேன், அதைத்தாறுமாறாக உபயோகிக்காதிருக்க மறைத்தும் வைத்தேன். இவைகளை அறிய மக்களுக்கு அறிவும் அளித்தேன். வேறு என்னதரமுடியும்? என்ன இருக்கிறது? இவ்வளவுதந்த எனக்கு அவர்கள் தந்தது என்ன?" என்றுகேட்கலானார் பரமசிவன்.

"நாதா! இதென்ன கேள்வி" என்று நாமயாரும்கேட்க எண்ணுவதுபோன்றே பார்வதியார் கேட்டார்கள். பரமன் என்ன தந்தார்கள்?" என்று மீண்டும் கேட்டார், கோபத்துடன். பிறகு இந்த உரையாடல் நடந்தது.

"ஏன், அழகான ஆலயங்கள் தரவில்லையா?"

"எனக்கா? கோயிலிலே குடிபுகுந்து, கபடநாடகமாடிக் காசுபறிக்கும் கள்ளர்களுக்கா? யாருக்குக் காமாட்சி, ஆலயம்? எனக்கா? எனக்குக்குடியிருக்க இடமா கேட்டேன்? நான்கேட்டது அதுவல்லவே. மக்களின் மனமன்றி எனக்குக் கோயில் வேறு வேண்டுமா?"

"அபிஷேகமும், ஆராதனையும் செய்கின்றனரே உமக்கு"

"எனக்கா? ஏமாளிகள் காசிலே, பாடுபடாதவன்வாழ நடத்தும் கோமாளிக் கூத்தல்லவா அது?"

"தேரும் திருவிழாவும் ஊருக்கும் நடத்துகிறார்கள் உன்னைப் பெருமைப்படுத்த"

(6ம் பக்கம் பார்க்க)

## பள்ளியறையில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"என்னைப் பெருமைப்படுத்தவா, குழலூதுவோனையும், குறுநகைபுரிவோனையும், இசைவாணனையும் இன்பவல்லிகளையும் பெருமைப்படுத்தவா?"

"ஏராளமான பணத்தை உனக்கு ஆபரண அலங்காராதிகளுக்குச்செலவிடுகின்றனர்"

"அந்தச்செலவு எனக்காகவா செய்யப்படுகிறது? நான் மண்ணோடுமண்ணைப் படைத்த பொன்னைக் கண்டா பூரிப்படைவேன். தேவி! பாம்பை அணிபவன் என்றுகூறும் அதேபாமரர் பவுன்களைச்செலவிடுவது எனக்காகவென்று எண்ணுகிறாய்.பக்திமான்என்றுதன்னைக் காட்டிக்கொள்வதன் மூலம் பாமரரை அடிமை கொள்ளலாம் என்று நினைக்கும் காசு படைத்தவனின் கபட நாடகமல்லவா அது"

"பாமாலை சூட்டினரே"

"தங்கள் புலமையைக்காட்ட"

"பூமாலை சூட்டுகின்றனரே"

"பூவையருக்குப் பிரியத்துடன் பூஜாரி வழங்க, எனக்கல்ல"

"எதற்கும் நீரேதுணை என்று கூறிப் போற்றுகின்றனரே"

"தன்னம்பிக்கையைத் தற்குறிகள் இழந்துவிட்டால் தலையாட்டிப் பொம்மைகளாகிவிடுவர், பிறகு நமது தர்பார் நடத்தச் சௌகரியமாக இருக்குமென்று தன்னலக்காரர்கள் புகுத்திய தத்துவமல்லவா அது. அது எப்படி என்னைப்போற்றுவதாகும்"

"உன் அடிதொழுதார்க்குஉண்டு சுகம் என்றுகூறிப் பஜிக்கின்றனரே"

"சுயநலக்காரன், ஒய்வுநேரத்தில்சொல்வது அது. கள்ளமறியாச் சிந்தைக்காரன் பிறனுடைய சுயநலத்தால் ஏமாறும்போது பேசும் வாசகம். அது என்னைத் திருப்திசெய்யுமா?"

"நீ கோயில் கொண்டிருக்கும் ஸ்தலங்களுக்கெல்லாம் திரள்திரளாகச் செல்கின்றனரே"

"மதியீனர்களின் மனமருள், அது. அதைத்துணைகொண்டு மந்தகாசவாழ்வு நடத்துகின்றனர் புரோகித வகுப்பார்"

"அர்ச்சகர்களையும், ஆலயப்பணியாட்களையும் அமர்த்தியுள்ளனரே"

"அவர்கள் வாழ! என்தேவைக்காக அல்ல!"

"தேவ பூஜைக்கு என, கீதமொழிக் குயில்களையும் ஆடலழகிகளையும், ஆலயங்களிலே நியமித்துள்ளனரே"

"ஆள்சேர்க்க, எனக்குத் தொண்டு புரிய அல்ல"

"மன்னாதி மன்னர்களையும் மண்டியிட வைக்கும் மகத்துவம் உள்ள மகேஸ்வரன் என்று கூறினரே"

"முடியுடை வேந்தரை மதியுடைக் கயவர் மடக்கியது, அந்த மயக்கமொழி பேசித்தான்"

உரையாடல் முடிந்தது. பார்வதியாருக்குக் கேள்விவரண்டுவிட்டது. பரமசிவத்துக்கோ பேச்சு நிற்கவில்லை. "பார்வதி! என்னைக் கல்லாக்கிச் செம்பாக்கினர் கயவர்கள், இவ்வளவு நலன்களைத் தந்த என்னைக் கல்லாக்கினர், செம்பாக்கினர். தகுமா அது? என்னைப்பற்றி, அருவருக்கத்தக்க ஆபாசம் நிறைந்தகதைகளைக் காமக்கூத்துகளை எழுதிவைத்தனர். அறிவுள்ளவரின் சிந்தனை என்னென்ன எண்ணுகிறது தெரியுமா? அன்பே! நான் பக்தனிடம்சென்று அவன் மனையாட்டியை என் பின்னோடு அனுப்பச்சொன்னேனும். எழுதலாமா, இதுபோலக்கதை. எழுதித் தொலைத்தார்களே, அறிவுவளர வளர, இத்தகையஆபாசக்கதைகள் வேண்டாமென்று ஒதுக்கிவிடவேண்டாமா? நான்மற்றொரு பக்தனிடம் சென்று பிள்ளைக்கறி கேட்டேனும், வேறோர் பக்தனின் கண்களைப் பெயர்த்தேனும். வில்லடி பட்டேனும், கல்லடி பட்டேனும், பிரம்பால் அடிபட்டேனும், பன்றிகளை மந்திரிகளாக்கினேனும், தாசிவீட்டுக்குத் தூதுசென்றவனும் நான், தேவி! கேள் இந்த அக்ரமத்தை, நான் சுந்தரன் என்றபக்தனுக்காகத்தாசி வீட்டுக்குத்தூது சென்றேனும், எழுதலாமா இதுபோன்ற கதைகளை? என்ன செய்வது, இப்படி என்னை நிந்திக்கும் கயவர்களை? என்பெயரைக்கூறி மக்களை ஏய்க்கும் புல்லர்களை" என்று பரமசிவன் கேட்டார்.

"என்ன செய்வதா? என் இழுத்து வந்து, ஆளுக்கு ஆறுமாதம் சுயமரியாதைப்பள்ளியிலே படிக்கச்சொல்வதுதானே" என்று சொல்லிவிடத்தான் வேண்டும், என்று தோன்றிற்று. இதற்குள் பார்வதியார், "பிரபோ! தங்கள் பேச்சைக்கேட்டபிறகு எனக்குப் பித்தம் தெளிந்தது. நீர் என்னசெய்வீர்? மக்கள் தங்களைத்தாங்களே பாழாக்கிக் கொள்கின்றனர், நம்மையும் இழிவாக்கிவிட்டனர், மதிவளருவதுதவிர அவர்கள் மீள வேறுமார்க்கம்இல்லை" என்று கூறிவிட்டு, நேரமாகிறது, தூக்கமும் வருகிறது." என்றார். அதேசமயத்திலே, "நேரமாகிறது எழுந்திரு" என்றுகூறி, என் முதுகைத் தம்பிதட்டக்கண்டு, விழித்தேன், கைலாயத்தில் நடைபெற்ற உரையாடலைப்பற்றிய கனவும் கலைந்தது, என்றான் வீரன்.

"சரியான கனவுதான் கண்டாய்! இதைப்போய்ப் பெரிய பிரமாதமாகக் கூறவந்துவிட்டாயே" என்று நான்கேலி செய்தேன்.

"பரதா! கூறினதுமட்டுமல்ல, இது இந்தக்கிழமை பத்திரிகையிலே வெளிவந்தாகவேண்டும்" என்று வற்புறுத்தினான் வீரன்.

'உனக்கு வேறுவேலைகிடையாதுபோ! கனவிலே கைலாயம் சென்றாய், பார்வதி பரமசிவன் பேசினதைக்கேட்டாய். இதையெல்லாம் பத்திரிகையிலே போடுவதா? நல்லவேலை' என்று நான் மறுத்தேன். விட்டானே ஒரு வெடிகுண்டு, வீரன்!

"அதுசரி, பரதா! நான் கனவுகண்டால், அது கவைக்குஉதவாது என்று கருதுவாய். இதுவேஒரு ஐயர் கனவாக இருந்தால் அது அருள்மொழியாகிவிடும், பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக இடம்பெறும்" என்றான்.

"அப்படி ஒருபத்திரிகையும், யாராரோ ஏதேதோ கனவுகள்கண்டால் வெளியிடாது" என்று நான் பத்திரிகை நடத்தும் முறைபற்றி விளக்கினேன்.

"உனக்கு மறதிஅதிகம்!" என்றான் வீரன்.

'எனக்கா?' என்றுகேட்டேன். ஆமாம் என்று கூறிவிட்டு, பலபேருடைய கனவுகள் புராணங்கள் என்றபெயரிலே இன்றும்நாட்டிலே உலவிமக்களால் நம்பப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. பரதா! நான் அதைக்கூட ஆதாரமாகக்காட்டவில்லை. உன்னுடைய ஒன்றேகாலணா பத்திரிகையைத்தள்ளு, பிரம்மஸ்ரீகள் நடத்துகிற, பெரியமூலதனமுள்ள, வளமான வருவாயுள்ள பத்திரிகையிலே, இதுபோன்ற கனவுகள் வெளியிடப்பட்டு, வாசகர்களின் மனதிலே நுழைக்கப்படுவதை நீ அறியாயா? இரண்டே உதாரணம் கூறுகிறேன்கேள். காந்தியார் பிர்லாகனவிலேதோன்றி பணம்கேட்டாராம். அது பத்திரிகையிலே வந்ததப்பா! சாதாரணமானவரல்ல அதற்கு ஆசிரியர், மகாத்துமாவின் மகன் இருக்கிறாரே தேவதாசர், நம்மஆச்சாரியாரின் மருமகன், அவரை ஆசிரியராகக்கொண்ட பத்திநிகையிலே "கனவு" வெளிவந்தது. கனவாகமட்டும் இல்லைஅது. காசும் கிடைத்தது. அந்தக்கனவுகண்டதும், அந்தக் கோடீஸ்வரர், நிஜமாகவே பணமும் தந்தாராம் காந்தியாருக்கு. சந்தேகமிருந்தால் இந்துஸ்தான் டைம்ஸ் என்றடில்லி பத்திரிகையைப்பார், ஆங்கிலப்பத்திரிகை, உன்தமிழல்ல!! காங்கிரசுக்கு முன்பு பிறந்ததேஒருகனபாடிஏடு, சுதேசமித்திரன், அது சாமான்யமானதா, 4பக்கம் பத்திரிகை என்றால், அதிலே விளம்பரம் எவ்வளவுதெரியுமா? அப்படிப்பட்ட பத்திரிகை ஒருவரின் கனவை வெளியிட்டது. சாதாரணமானதல்ல! நான் கைலாயத்தைக்கண்டு, பரமனும் பார்வதியும் பேசியதைக்கேட்டேன் என்றால்

4-ம் பக்கம் பார்க்க.

# தமிழா கேள்!

சென்றவாரத் தொடர்ச்சி.

இலக்கியத்துக்குக்கற்பனை துணையென்றாலும் இலக்கணத்துக்குக் கற்பனை கேடு பயப்பதன்றோ? வெண்பாப்பாட்டியல் (வச்சணந்தி மாலை) என்ற பிற்காலநூல் எவ்வளவு கற்பனையில் சூழ்ந்ததாகவும், கருத்திற் கொவ்வாததாகவும் அமைந்திருக்கிறது என்பதைப் புலவர்கள் நினைத்துப்பார்க்கட்டும். ஏன் இந்த அறியாமை உருவெடுத்துவந்த பாட்டியல் ஏடு பல்கலைக்கழகங்களில் பாடமாய் அமைதல் வேண்டும்? படிப்பதனால் ஏதாவது பயனிருக்க முடியுமா? நால்வகை ஜாதியை இந்நாட்டினில் நாட்டினீர் என்று கபிலரகவல் ஆரியரைப்பார்த்து முழங்கிடும் உண்மையுணர்ந்தும், எழுத்திலும் நால்வகைச்சாதியா? உயிரெழுத்தும்,மெய்யெழுத்தும், உயிர்மெய்யும், சார்பும் எழுத்தின்வகையாம் என அறிவுடம்பட்டு ஆயிரமாயிரமாண்டுகளாய் வழங்கிய உண்மைக்கு மாறாக, ஆரியம்புகுந்து வளம்பெற்றுத், தமிழ்கற்று, இலக்கியமியற்றும் தொண்டினை ஏற்று, மெள்ள மெள்ள ஆரியப்புலவரெல்லாருள்ளமும் ஆரியக் கருத்துறையும் மடமாக்கி, அவர்கள் எழுப்பிடும் ஒலியும், பொருளும் ஆரியத்தைவெளியிடும் நிலைமையை உண்டாக்கிவிட்டது. முக்காலத்திலும் மொழிவழங்கிடத்துணைபுரியும் அறிவியற் சாலையாம் இலக்கணத்திலும் ஆரியநச்சரவு தன்படத்தினை எடுத்து ஆடிடுகின்றது.

பாட்டியலில், பன்னீருயிரும்,முதலாறுமெய்யும் பார்ப்பன வருணம் என்றும், அடுத்த ஆறுமெய்கள் அரசவருணம் என்றும், நான்கு மெய்கள் வைசியவருணம் பிறஇரண்டும் சூத்திரவருணம் என்றும் கூறப்படுகின்றது. ஆரியருடையபிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர என்ற சாதிப் பிரிவுகள், மக்களிடைமட்டும் நிலவின் ஒருக்கால் ஒழிக்கப்பட்டு விடுமோ என்றெண்ணி, நாட்டின் அறிஞர் என்றெண்ணப்படும் புலவர் வழங்கிடும் பாவிலும், எழுத்திலும் வருணப்பொருத்தம் வகுத்தினர். 'ல, வ, ற, ன' என்றநான்கும் வைசிய எழுத்துக்களும்; ழ, ள, என்பன சூத்திர எழுத்துக்களுமாகும். இதிலும் ஓர் உண்மை விளங்குகின்றது. தமிழ்மொழிக்கே சிறப்பாகவுள்ள 'ழ' 'ற' 'ன' என்றமூன்றெழுத்துக்களும்,வைசிய சூத்திரரினமாக அமைக்கப்பட்டுள்ளன. வடமொழி 'ல' 'ள' வாகவும் ஒலித்திடுமாறும், தமிழுக்குச்சிறப்பாகத், தனி எழுத்தாகவுள்ளது. 'ழ' வடமொழியில் இல்லை. இவை சூத்திர எழுத்தெனக் கூறப்படுவதன் பொருளென்ன?

ஆரியரிடமிருந்து பிரித்துக்காட்டக் கூடியஅளவு தனித்துவாழ்ந்த திராவிடர்களைத்தான் ஆரியர் "சூத்திரர்" (தாசிமக்கள்) என்று நான்காம் வருணத்தாராய் வழங்கினர் என்பதன் விளைவன்றோ? அவ்வசந்தையை ஒழிக்க விரும்புமறிஞர்கள் இவ்விலக்கணத்தை நிலவிடவிட்டு வைக்கமுடியுமா?

பார்ப்பனரை வெண்பாவாலும், அரசரை ஆசிரியப்பாவாலும், வணிகரைக் கலிப்பாவாலும், சூத்திரரை வஞ்சிப்பாவாலும், பாடவேண்டுமாம். இது இலக்கியவழக்கற்றது, ஆனால் இலக்கணத்தில் விதியாகப் புகுந்துள்ளது.

பாக்களில் சிறந்தவெண்பா வென்னும் ஒண்பா பார்ப்பனருக்கு, பார்ப்பனரை ஆசிரியராகக்கொண்ட அரசர்க்கு அதற்கடுத்த ஆசிரியப்பா, வைசியருக்கு வகைபல குறைந்தகலி, சூத்திரர் என்ற திராவிடருக்கு ஆரியவஞ்சனை, வாஞ்சனை உருவெடுத்துவழங்கிய வஞ்சிப்பா; கொஞ்சிடப் பயனற்றவஞ்சி இனம்பல கொண்டபாவன்று, இனம் பல கலந்த வெண்பா கலப்புடைய ஆரியத்துக்குப் பண்பால் பொருத்தமேனும் பாகுபடுத்திடும்முறை பொருத்தமுடையதா? தமிழ்ப்பா இயற்றுமிடத்திலும் ஆரியத்துக்கு முதல் தாம்பூலமா? இன்னும் கலம்பகத்தில் (பாக்களைக் கலந்துபாடும் முறை) தேவருக்கு நூறு செய்யுளும் பார்ப்பனருக்கு 95-ம் அரசருக்கு 90 செய்யுளும் அமைச்சருக்கு 70 செய்யுளும் வணிகருக்கு 50-ம் மற்றவர்க்கு 30 செய்யுளும் பாடவேண்டுமென்பது பாட்டியல் விதிகளாம். ஆண்டவ்னின் அவதாரம் அரசன் என்று எண்ணியிருந்த நாட்டிலேயே, அரசனைவிடப் புரோகிதப்பார்ப்பான் உயர்வென்றுகருதி அதிகமான செய்யுள்செய்வது முறைஎன்று எழுதிய நயவஞ்சகர், பிறமக்களை இழிவுபடுத்தும் முறையில் இலக்கியத்திலோ இலக்கணத்திலோ கூறியிருப்பது ஆச்சரியமன்று. ஆனால் இவற்றைப் புலவர்கள் தாங்கிநிற்பதுதான் நமக்கு வருத்தத்தைத் தருகின்றது. மனுநீதியைவிடப் பாட்டியல் எவ்வகையில் மாறுபட்டிருக்கின்றது. இதுமக்கள் முன்னிலையில் பொசுக்கப்பட்டாலொழிய, திராவிட இனஉணர்ச்சியும், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்றஅடிப்படைக் கருத்தும் மறுபடியும் நிலவிடமுடியுமா? ஆரியக்கொள்கைகள் தமிழ் நூல் வடிவில் இருப்பினும், ஆரியர் கையாண்டதீவளர்க்கும் வேள்விமுறைக்கே இரையாகப் பலியிடும்நாளே நம்மை நாம் உணர்ந்த நாளாகும். இன்னும் பாட்டியல் வழங்கிடும் பொருத்தங்களையெல்லாம்பார்த்துத் தமிழ்ப்பா இயற்றுவதென்பது பயனிலசெய்தலாகும். மங்கலப் பொருத்தம், முதல்சொல், எழுத்து, தானம், பால், உணவுருணம், நாள், கதி, கணம், ஆகியஎல்லாப் பொருத்தங்களும், தமிழ் மொழியில் உள்ள எல்லா விழுமிய சொற்களையும் பயன்படுத்தி அழகிய, கருத்துநிறைந்த கவிகளை இயற்றும் இயற்கை முறையை மட்டுப்படுத்தும் மாற்றுவகையில் அமைந்துள்ளது. இன்னும்பல சொற்களையும் பயன்படுத்த முடியாது இப்பொருத்தங்கள் தடைசெய்வதனால், பலவடமொழிச் சொற்களையும் (பிறமொழி எனப்பாராது) புலவர்கள் கையாளும் நிலைமையையும்ஏற்படுத்தியது. தனித்தமிழ், உயர்தனிச் செம்மொழி தன்இயல்பினை இழக்கவோ அன்றிஇழந்த நிலையைக் காட்டவோ பாட்டியல் பயன்பட முடியுமேயன்றி, எந்த முறையிலும் தமிழ்மொழிக்கு ஏற்றதல்ல, பொருத்தமானதுமன்று என்பது எவரும்மறுக்க முடியாததாகும். ஆரியம் ஒழியத்தன்னுணர்வு பெற்றிடுதல் இன்றியமையாதது. தன்னுணர்வு வளரத் தமிழ்க்கழனி திருத்தப்படுதல் வேண்டும். இலக்கியப் பூங்காவானாலும் இலக்கண விளைநிலமானாலும், ஆரியக்கள்ளி முளைத்து வளர்ந்திருப்பின், அதன் தீமையை உணர்ந்த திராவிடர் அதனைத்தீவைத்தேனும் ஒழித்திடத்தயங்கார். ஆகவே, தோழர்களே, மாணவர்களாகிய நாம் நமதுகடமையை உணர்ந்து ஒல்லும் வகையெல்லாம் திராவிட இனம் எழுச்சிபெறவும், வாகைசூடிடவும் முயல்வோமாக.

"அன்பழகன்"

---

# சங்கே, முழங்கு!

2ம் பக்கத் தொடர்ச்சி.

என்று பூரிப்போடு பண்பாடி, பார்ப்பனியப் பாதகப்பேயை நம் நாட்டெல்லையைவிட்டு அகற்றி, நம்தமிழ் நாட்டைப் பண்டைய தமிழ்நாடுபோல் செழித்தோங்கச்செய்யத் தமிழர்கள் முன்வர வேண்டுகிறேன்! வீரத்தமிழர்களே விரைவில் ஆவனசெய்யுங்கள்! வீணரின் வேடத்தைக்கண்டு ஏமாறுதீர்கள்! புராணப் பூச்சியினிடம் பூரிப்புக்கொள்ளாதீர்கள்! சங்கே முழங்கு! தமிழ்ச்சங்கே தமிழ்நாடு தமிழருடையதுஎன்று ஒலி, என்று தமிழ்ச்சங்கில் வீரத்தமிழர்கள் ஒவ்வொருவரும் போரொலி முழக்குங்கள்.

---

## மதுரையில்

# பொதுக்கூட்டம்.

9—4—44 மாலை பீப்பில்ஸ் பார்க் மைதானத்தில். தோழர் W. P. A. சௌந்தரபாண்டியன் அவர்கள்தலைமையில், நடந்த பொதுக்கூட்டத்தில், தோழர்கள் A. பொன்னம்பலனார், கும்பகோணம் V. சின்னத்தம்பி, காஞ்சிபுரம் வெங்கடராமன், நடிகர்நாராயணசாமி C. N. அண்ணாத்துரைஆகியோர்"திராவிடர்கடமை" எனும்பொருள் குறித்துப்பேசினர். தோழர் வேணுகோபால் வந்தனங்கூறினர்.

# பார்வதி பி. ஏ;

1-ம் பக்கத்தொடர்ச்சி.

"டாக்டர் லலிதகுமாரிக்கு உன்விஷயமாக விசேஷஅக்கரைஇருப்பது எனக்குத் தெரியும். ஆகவே நான் இந்தச்செய்தி தெரிந்ததும், பெங்களூர் போய்த்தான் தீரவேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால், நான் பெங்களூர் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது" என்று கூறிக்கொண்டே உத்தமியிடம், பார்வதி ஒரு விளம்பரக் கடிதத்தைக் கொடுத்தாள்.

உலகத் தொழிலாளரே
ஒன்றுபடுங்கள்!
இன்குலாப் ஜிந்தாபாத்!
அச்சுத்தொழிலாளரே, முதலாளித்வ
நச்சரவை நசுக்குங்கள்!!
அச்சுத் தொழிலாளர் மாநாடு.

தோழர்களே!

மாகாண அச்சுத்தொழிலாளிகளின் முதல் மாநாடு, பெங்களூரில் நடைபெறுகிறது.

தொழிலாளர் தலைவரும், "ரட்சகன்" பத்திரிகை ஆசிரியருமான தோழர் பார்த்திபன் தலைமை வகிக்க இசைந்துள்ளார்.

பிரசங்கபூஷணி ரோஸ்மேரி அம்மையார் மாநாட்டை ஆரம்பித்துவைப்பார்.

கொடைவள்ளல் ஆலாலசுந்தரர் கொடி ஏற்றுவிழாவாற்றுவார்.

கலாரசிகர் கனகசபேசர் காலமும் காவியமும் எனும் பொருள்பற்றிப் பேசுவார்.

கட்டணம் இல்லை! அனைவரும் வருக!! மாநாட்டுப் பிரதிநிதிகள் மாகாணம் பூராவிலிருந்தும் வருகின்றனர்.

இங்ஙனம், அச்சுத்தொழிலாளர் மாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர்
ஆறுமுகம்பிள்ளை.

என்று பல வர்ணங்களில் அச்சடிக்கப்பட்ட அந்தத் துண்டு விளம்பரத்தைப், படித்துவிட்டு, உத்தமி, பார்வதியைப் பார்த்தாள் புன்னகையுடன். புன்னகையின் பொருள் விளங்கவில்லை லேடிடாக்டருக்கு. பார்த்திபன் என்ற எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்த இடத்திலே தன் விரலைவைத்துக்கொண்டு,விழியால்,லலித குமாரிக்கு, உத்தமி, விஷயத்தைவிளக்கினாள். "ஓஹோ!" என்று டாக்டர் கேலிசெய்யவே, பார்வதி, தலையை அசைத்துவிட்டு, "பார்த்திபன், இந்த மாநாடுகூட்டுவது பதியதோர் மோசடி செய்வதற்காக இருக்கும். அது என்ன என்பதைத் தெரிந்துகொள்ளநான் வந்திருக்கிறேனே தவிர, உத்தமி எண்ணுகிறபடி, பார்த்திபனிடம் காதல் கொண்டல்ல. அவனுடைய மாயாஜாலங்களும், மயக்கமொழிகளும் என்னை ஏமாற்றாது. அவன் இத்தனை நாட்களாக, மலையாள நாட்டிலே கதகளிநடனம் காணச்சென்றிருந்தானும். கலாரசிகர் கனகசபேசர் ஏடுகளிலே படித்துக்காட்டியரசங்களைக்காண அவன் பல வீடுநுழைந்து மனோகரிகளிடம் பாடக்கேட்டானாம். அந்தப் பயிற்சிக்காலத்திலே, பூஜையிலே புலிபுகுந்தது போலப் போய்ச் சேர்ந்தாராம், ஆலாலசுந்தரர்; அவரையும் சரிப்படுத்தி, பார்த்திபன், இங்கே இழுத்துவருகிறான்! கொடைவள்ளல் என்றுபெயராம்,தெருக்கோடியிலே பிச்சைக்காரன் வருவதைக் கண்டாலே கதவைத்தாளிட்டுக் கொள்ளும் லோபி ஆலாலசுந்தரருக்கு! இங்குள்ள மக்களுக்கு உண்மையிலே, ஆலாலசுந்தரர் எப்படிப்பட்டவர் என்பது என்னதெரியும். மாநாட்டிலே, அவரைக் கர்ணனென்றும் குமணன் என்றும் புகழ்ந்து பேசுவார்கள். விஷயமறியா மக்கள் உண்மைதான் என்று நம்புவார்கள்" என்று பார்வதி ஆத்திரத்துடன் கூறிவிட்டு அச்சுத்தொழிலாளி ஆறுமுகம்பிள்ளை என்பவர் யார்? எங்கே இருப்பவர்? எப்படிப்பட்டவர்? என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று டாக்டரிடம் கூறினாள். லலிதகுமாரி, கம்பவுண்டரைக் கூப்பிட்டு "உனக்கு அச்சுத்தொழிலாளி ஆறுமுகம்பிள்ளை தெரியுமா?" என்று கேட்டாள். "தெரியும்......ஆனால் எனக்குச் சினேகமல்ல, எப்போதாவது பார்ப்பதுண்டு... ...என்று கம்பவுண்டர் இழுத்துக்கொண்டேபோனான். தனக்குத் தெரிந்தவன் தான் ஆறுமுகம்பிள்ளை என்பதைக் காட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை என்பது அவன்பேச்சுத் தோரணையிலேயே தெரிந்தது. லேடிடாக்டர், பார்வதியைப் பார்த்து, மற்ற விஷயங்களை நீயேகேட்டுக்கொள்" என்றுரைத்தாள். பார்வதி, துண்டு விளம்பரத்தைக்காட்டி. "இந்த மாநாடு சம்பந்தமாக, அவரைச்சில விஷயம் விசாரிக்கவேண்டும். அதற்காகத்தான் அவரை உங்களுக்குத்தெரியுமா என்று கேட்கிறேன்" என்று கூறினாள்.

"அவரையாவது துவரையாவது.அவன் எனக்குத்தெரிந்தவன் என்று சொல்லிக்கொள்ளவே நான் வெட்கப்படுகிறேன், நீங்கள் அவனை அவ்வளவு மரியாதையாக அவர்இவர் என்று சொல்கிறீர்களே. ஆறுமுகம் சுத்தஅம்பக்பேர்வழி. பெங்களூரிலேயே அவனுக்கு அம்பக் ஆறுமுகம் என்றுதானே பெயர். புளுகுதான் அவனுக்குப் போசனம்! மோசம் செய்வது தான் மோட்சம் அவனுக்கு! பெரியபகல் வேடக்காரப் பயல். குடிகாரன். அவன் அச்சுத்தொழிலாளர் மகாநாடா நடத்தப் போகிறான், மச்சுத்தொழிலாளி மாநாடுகூட நடத்துவான். யாரோ பாவம், நல்லமனுஷ்யர்களை,இங்கேஇழுத்துவந்து அகப்பட்டதைச் சுருட்டப்போகிறான். உங்களுக்கு இந்தப் பார்த்திபனோ, மற்றவர்களோ தெரிந்திருந்தால், உடனே தந்தி அடித்துவிடுங்கள், இந்தப் பயலோடு பெரிய மனுஷர்கள் [illegible] நஷ்டம்அடையக்கூடாதுபாருங்கோ" என்று கம்பவுண்டர் கூறினான். பார்வதி சிரித்துவிட்டு, "இனம் இனத்தோடுதானே சேரும்! ஆறுமுகம் வயிற்றைக்கழுவ மோசடி செய்பவன், இந்தப் பார்த்திபன் முதலியவர்களுக்கு அந்த நிலைமைஇல்லை. என்றாலும், அவர்கள் அம்பக் ஆறுமுகத்துக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல. அது கிடக்கட்டும், நான் இந்த ஆறுமுகத்தைப் பார்த்துப் பேசவேண்டுமே, எங்கே போனால் பார்க்கலாம்" என்று கேட்க, கம்பவுண்டர், "நீங்க ஒரு வேடிக்கைஅவனைப்பாக்கநீங்கபோவதா? ரொம்பஇலட்சணம். வாடா,கழுதென்னு வருவான், அவனைப் பாக்கறதுக்கு போகணுமா? அவன்சுத்த மட்டமான பேர்வழிங்க. என்னமோ, மகாநாடுகூட்டறான்னு மதிச்சிடாதிங்க. அம்பக் ஆறுமுகத்தின் கதை கேட்டால்லோ தெரியும், ஆளின்யோக்யதையை"என்று கூறிவிட்டு, மறுதினம் ஆறுமுகத்தை அழைத்துவருவதாகச் சொன்னான். சேற்றிலேதானே தவளை இருக்கும்! தவளைக்கும் சேறுதானே கிடைக்கும்!! அது போலத்தான், அம்பக் ஆறுமுகத்துக்கு ஏற்றஆள்தான் பார்த்திபன்! பார்த்திபனுக்கு ஏற்றவன்தான் ஆறுமுகம், ஆனால், இந்த இரண்டு வேடதாரிகளுமாகக்கூடிக்கொண்டு, அச்சுத்தொழிலாளரைக்கெடுப்பதா? சிச்சீ! இதுமகா கேவலம். ஏழைத் தொழிலாளரின்வெள்ளைஉள்ளத்தை இப்படிக் கபடர்கள் கொள்ளைஅடிக்கின்றனர். இது மகாதுரோகம்" என்று பார்வதி பரிதாபத்துடன் பேசலானாள். "பழயபைத்யம் இன்னும் அவளுக்கு விடவில்லை" என்று உத்தமி, டாக்டருக்குக் கூறினாள். "ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரியானபைத்யம்" என்று கூறிவிட்டு லேடிடாக்டர் சிரித்தாள். (தொடரும்.)

## மாற்றம்.

தமிழர் இயக்கஆர்வமும், சீர்திருத்த நோக்கமும், பொதுநலத்தொண்டிலே பற்றும்கொண்ட புவனகிரி சப்ரிஜிஸ்டிரார் அன்பர், சு. பூவராகன் அவர்கள், பண்ருட்டிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவரதுவருகை, பண்ருட்டித் தமிழருக்கு ஒரு வாய்ப்பு. புவனகிரித் தோழர்கட்கோ உதவிசெய்யும் கைஇல்லையே என்ற ஏக்கந்தான்!

தோழர் பூவராகன் அவர்களைப் பாராட்டி, புவனகிரிவாசிகளும்,கிருஷ்ணபுரம்வாசிகளும் விருந்து வைபவங்கள் நடத்தினர். பலதோழர்கள் அவரது அருங்குணத்தைப் பாராட்டிப்பேசினர்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.